மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அதற்காகத்தான் பொது ஏலத்திலே விடுகிறார்கள். பொது ஏலம் வரும்போது எவ்வளவு குறைந்த விலைக்கு வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, சென்னையில் உற்பத்தியாகக்கூடிய கழிவு மொத்தம் எவ்வளவு? அந்தக் கழிவுகளை உரமாக மாற்றுவதற்கு அரசு என்னென்ன செயற்குறிப்புகளை வைத்திருக்கின்றது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, சென்னையிலே ஒரு நாளைக்கு 1,500 டன் கழிவு உற்பத்தி ஆகிக்கொண்டிருக்கின்றது. அவற்றை உரமாக மாற்றுவதற்கு தற்போது சைதாப்பேட்டை பகுதியில் ஒரு திட்டத்தை அமல் படுத்திக்கொண்டிருக்கிறோம். கம்போஸ்ட் ப்ளான்ட் என்ற வகையிலே ஒரு கோடி ரூபாய்க்கு மேலாக அந்தத் திட்டம் அமல்படுத்தப்பட இருக்கின்றது.

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கம்போஸ்ட் உரம் நகராட்சிகளில் விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடப்பதற்குக் காரணம் அதை வாங்கவேண்டிய விவசாயிகள் அந்தத் தொலைவில் இருந்து வரவேண்டி இருக்கின்றது. ஆகவே பெரிய நகராட்சிகளைச் சுற்றியுள்ள கிராமங்களில் 20 மைல் சுற்றளவுக்காவது 5, 6 இடங்களில் கம்போஸ்ட் உர டெப்போக்களை அமைத்தால் விவசாயிகள் சுலபமாகப் பெற்றுக்கொள்ள வசதியாக இருக்கும். இந்த யோசனையை அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தஞ்சை மாவட்டத்தில் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் பதிவு செய்துகொண்டோர் எண்ணிக்கை

*வினா எண். 38—திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் வேலை கேட்டு பெயர்களைப் பதிவு செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) இதுவரை எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது;

[1982 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : (அ) 32,102 பேர்கள்.

(ஆ) 26,887 பேர்கள்.

திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி வேலை வாய்ப்பு பெற்றவர்களுக்கு ஊதிய மாக வழங்கப்பட்ட தொகை எவ்வளவு ? செய்து முடிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை பற்றியும், அதற்காகச் செலவிடப்பட்ட தொகை பற்றியும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அது போன்ற புள்ளி விவரங்கள் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் அந்த விவரங்களைத் தருகிறேன்.

திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த பட்டதாரி இளைஞர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பினை அளிக்கும் வகையில் இத்தகைய திட்டங்களை அரசு செயல்படுத்துமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அதற்கான தனித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

திரு. பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கையை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பதிவு பெற்றவர்களில் எவ்வளவு பேர்களுக்கு வேலை உத்தரவாதம் கொடுக்கப்பட்டிருக்கின்றது ?

மாண்மிபுகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மூலக் கேள்வியின்படி தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 32,102 பேர்கள் பதிவு செய்து கொண்டவர்கள், அவர்களில் 26,887 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கின்றது. மேலும் இந்தக் கேள்வி கேட்கப்பட்டு இருப்பது 7-வது மாதத்தில். ஆகவே இந்த நான்கைந்து மாதங்களில் எல்லோருமே வேலை பெற்றிருப்பார்கள்.